**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.197/2024**

**06.11.2025**

**P.W.1- மாரியம்மாள்**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது கணவர் பெயர் கருத்தப்பாண்டி. எனது கணவர் பிரதிவாதிக்கு ரூ.2 லட்சத்தை கந்துவட்டிக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய கடனுக்கு ரூ.160,000 கடனை அடைத்துவிட்டார் என்றும், பாக்கி ரூ.40,000ம் தான் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு ஈடு எழுதிக்கொடுப்பதற்கு முன்பாக வேல்முருகன் என்பவருக்கு ரூ.2 லட்சத்திற்கு ஈடுகடன் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் உறவினர் சின்னச்சாமியை தெரியுமா என்றால் தெரியும். சின்னச்சாமி கருத்தப்பாண்டியிடம் ரூ.2 லட்சம் கடன் கேட்டார் என்றாலும், கருத்தப்பாண்டி ஏதாவது பொறுப்பு எழுதிக்கொடுக்க சொன்னார் என்றாலும்,அதனடிப்படையில் பிரதிவாதியிடம் பேசி பிரதிவாதி ஏற்கனவே வேல்முருகனுக்கு ரூ.2 லட்சத்திற்கு ஈடுகடன் வைத்த தாவா சொத்தை ஈடுகடனை ரத்து செய்து ரூ.4 லட்சத்திற்கு கருத்தப்பாண்டிக்கு எழுதிக்கொடுத்தார் என்றாலும் அதனடிப்படையில் சின்னச்சாமி ரூ.2 லட்சம் செலுத்த வேண்டும் என்றாலும், பிரதிவாதி செலுத்த வேண்டிய ரூ.2 லட்சத்தில் ரூ.1,60,000 எனது கணவர் கருத்தப்பாண்டியிடம் பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றாலும், அதற்கான தவணை நோட்டு பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரியல்ல. பாக்கி ரூ.40,000த்தை பிரதிவாதி செலுத்த தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.06 16:57:40 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.